# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## நான்காம் தவணைப் பரீட்சை - 2022
# Conducted by Field Work Centre, Thondaimanaru
# 4th Term Examination - 2022

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| இந்து நாகரிகம் I / Hindu Culture I | Two hours / Gr -13 (2022) | 46 | T | I |

### பகுதி – I

❖ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01. இந்து நாகரிகம் சிறப்புடன் விளங்கிய காலப்பகுதியாக ஆய்வாளர்கள் குறிப்பிடுவது.
   1) கி.மு 3750 – கி.மு 2750  2) கி.பி 3750 – கி.பி 2750  3) கி.மு 3250 – கி.மு 2750
   4) கி.மு 2750 – கி.மு 3750  5) கி.மு 3250 – கி.மு 3750

02. பிரம்ம வேதம் என்ற பெயரால் அழைக்கப்படுவது.
   1) இருக்குவேதம்  2) யசூர்வேதம்  3) அதர்வவேதம்
   4) சாமவேதம்  5) அர்த்தவேதம்

03. "பெரும்பாலும் சிறந்த வாழ்க்கைக்கு அடிப்படையாக அமைகின்ற உளப்பாங்கின் வெளிப்பாடே பண்பாடு ஆகும்" எனக் கூறியவர்
   1) தெ. பொ மீனாட்சி சுந்தரனார்  2) எட்வாட் பர்னாட்டைவர்
   3) டாக்டர் இராதா கிருஷ்ணன்  4) ஆலபர்ட் ஸ்விட்சர்
   5) பெர்கூஸன்

04. திரயீ வித்யா எனப்படுபவை.
   1) சாமம், அதர்வணம், இருக்கு  2) இருக்கு, அதர்வணம், யசுர்,
   3) இருக்கு, யசுர், சாமம்  4) பிரம்மவேதம், இருக்கு, பிராமணங்கள்
   5) சங்கிதைகள், சாமம், யசுர்

05. சிவாகமங்கள் குறிப்பிடும் அட்டமா சித்திகளுள் அடங்கும் தொகுதி
   1) இயமம், பிராப்தி, பிரகாமியம்  2) அணிமா, ஆசனம், வசித்துவம்
   3) அனிமா, மகிமா, லகிமா  4) இயமம், நியமம், ஆசனம்
   5) அணிமா, தாரணை, சமாதி

06. "அடுத்தானை உரித்தானை அர்ச்சுனனுக்கு பாசுபதம் கொடுத்தானை" எனும் தேவாரப் பாடலடியினூடாக வலியுறுத்தப்படும் கதை
   1) இராமாயணம்  2) மகாபாரதம்  3) பாரத அம்மானை
   4) சிவரகசியம்  5) மார்க்கண்டேய புராணம்

07. புராணங்களில் பக்தி மரபுகளை வெளிப்படுத்தும் கதையாக அமைவது.
   1) நஞ்சுண்டகதை  2) கிருஷ்ண அவதாரக் கதை  3) பிரகலாதன் கதை
   4) அடிமுடிதேடிய கதை  5) மகிடாசுரனை அழித்த கதை

08. வைணவ ஆலயங்களுக்குச் சொந்தமான நிலங்கள் எவ்வாறு அழைக்கப்பட்டன.
1) தேவதானம் 2) திருவிடையாட்டம் 3) சதுர்வேதி மங்கலம்
4) குறிஞ்சி 5) மருதம்

09. "தலையாரக் கும்மிட்டுக் கூத்துமாடி சங்கரா சயபோற்றி" எனப் பாடியவர்.
1) திருஞான சம்பந்தர் 2) மாணிக்கவாசகர் 3) சுந்தரமூர்த்திநாயனார்
4) திருநாவுக்கரசர் 5) சேந்தனார்

10. மகாபாரதத்திற்கு கிருஷ்ணசந்தம் என்னும் உரையை எழுதியவர்
1) நந்திவர்மன் 2) நீலகண்டசாஸ்திரி 3) டாக்டர் இராதா கிருஷ்ணர்
4) இராமானுஜர் 5) சானவதிம்மர்

11. நடராஜ பெருமானின் வடிவத்திலுள்ள தூக்கிய திருவடி குறிப்பது.
1) மறைத்தல் 2) படைத்தல் 3) காத்தல் 4) அழித்தல் 5) அருளல்

12. வடநாட்டில் எழுந்தயோகம், ஞானம் என்பவற்றோடு தென்நாட்டில் எழுந்த பக்தி சரணாகதி என்பவற்றையும் சேர்த்து அரிய பாடல்களைப் பாடிய பக்தி நெறியாளர்.
1) இராமானந்தர் 2) கபீர்தாசர் 3) ஸ்ரீ சைதன்யர்
4) மீராபாய் 5) துளசிதாசர்

13. வட இந்தியாவில் சமய நூற்கல்விக்கு முதன்மை அளிப்பது.
1) வாரணாசி 2) பாகூர் 3) சோழிங்கூர்
5) தட்சசீலம் 5) லாகூர்

14. இறைவன் ஒருவரே உண்மை எல்லோரும் வாருங்கள் என்று சமய ஒருமைப்பாட்டையும் சமூக ஒருமைப்பாட்டையும் இணைத்த சீர்திருத்திவாதி.
1) இராமலிங்க அடிகளார் 2) இராம கிருஷ்ணர் 3) விவேகானந்தர்
4) சுவாமி தயானந்த சரஸ்வதி 5) இராஜராம்மோகன்ராஜ்

15. சுந்தரமூர்த்தி நாயனாரால் பாடல் பெற்றதலம்.
1) திருக்கேதிச்சரம் 2) முன்னேச்சரம் 3) நகுலேச்சரம்
4) திருக்கோணேஸ்வரம் 5) சந்திர சேகர ஈச்சரம்

16. "அவனி நாராயணன்" எனும் விருதுப்பெயர் கொண்ட மன்னன்.
1) பல்லவர்மன் 2) சூரியவர்மன் 3) ஈஸ்வரவர்மன்
4) நந்திவர்மன் 5) பூர்ணவர்மன்

17. "எங்கே தர்மம் உள்ளதோ அங்கே வெற்றி உள்ளது" எனக் கூறும் இலக்கியம்
1) உபநிடதங்கள் 2) தர்ம சாஸ்திரங்கள் 3) இதிகாசங்கள்
4) பகவத் கீதை 5) வேதங்கள்

18. நல்லூர் மகோற்சவ காலங்களில் திருவாவடுதுறையிலிருந்து ஓதுவார்களை அழைத்து தமிழ் வேதபாக்களை ஓதுவித்து பண்ணிசை மரபை வளர்த்த சைவப் பெரியார்
1) சுவாமி விபுலானந்தர் 2) விவேகானந்தர்
3) ஆறுமுகநாவலர் 4) சி. வை. தாமோதரம்பிள்ளை
5) சபாரத்தின முதலியார்

19. பிரம சூத்திரத்திற்கு மகாபாஷியம் என்னும் விளக்கவுரையை எழுதியவர்.
1) மத்துவர் 2) சங்கரர் 3) இராமனுஜர்
4) பாதராயணர் 5) ஸ்ரீ கிருஷ்ணர்

20. அருணாசல தேசிகருக்கு ''தேசிகர்'' என்ற பட்டம் சூட்டி பெருமைப்படுத்திய இராம கிருஷ்ண சங்கத்துறவி.
1) விபுலானந்த அடிகளார் 2) வித்துவான் பூபாலபிள்ளை
3) அவிநாசா நந்த அடிகளார் 4) நவனீதகிருஷ்ணபாரதியார்
5) இராச நாயக முதலியார்

21. திருக்கோணேஸ்வரத்து அறக்கட்டளையை மேற்பார்வை செய்பவர் எவ்வாறு அழைக்கப்படுவர்.
1) பன்மகேஸ்வரன் 2) சங்கமர் 3) கப்புறாளை
4) வீரவனஞ்சியார் 5) நானாதேசிகர்

22. காசி வாசி செந்திநாதையர் இயற்றிய சைவசமயம் சார்ந்த நூல்களுள் இரண்டினைக் கொண்ட தொகுதி.
1) சைவ போதம், சிவாலயதரிசன விதி 2) புட்பவிதி சைவப்பிரகாசிகை
3) தேவாரம், வேதசாரம், சிவயோக தரிசனம் 4) கந்தபுராணநவநீதம்,சைவவேதாந்தம்
5) முப்பொருள்விளக்கம், முத்தி நிச்சயம்

23. ''மாயோன் மேயமை வரை உலகு'' என்ற வரிகள் மூலம் திருமாலைப் போற்றும் சங்க இலக்கியம்.
1) அகநானூறு 2) பரிபாடல் 3) தொல்காப்பியம்
4) பதிற்றுப்பத்து 5) திருமுருகாற்றுப்படை

24. பிரளயாகலர் எனப்படுவோர்.
1) ஆணவ மலத்தை மாத்திரம் உடையவர்
2) ஆணவம், மாயை ஆகிய இரு மலங்களை உடையவர்
3) கன்ம மலத்தை மாத்திரம் உடையவர்
4) ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் உடையவர்
5) ஆணவம், கன்மம் ஆகிய இரு மலங்களை உடையவர்

25. சிவலிங்க இலக்கணம், உமாமகேஸ்வர இலக்கணம் ஆலய அமைப்பு விதி ஆகியவற்றைக் கூறும் ஆகமத்தின் பகுதி
1) கிரியா பாதம் 2) சரியா பாதம் 3) யோகா பாதம்
4) ஞானா பாதம் 5) உருத்திர பாதம்

26. வேத சாரம் என அழைக்கப்படுவது.
1) ஆகமங்கள் 2) திருமந்திரம் 3) உபநிடதங்கள்
4) தேவாரங்கள் 5) பகவத்கீதை

27. ''ராஜராஜன் சதுர் வேதி மங்கலம்'' அமைந்த இடம்
1) கந்தளாய் 2) அநுராதபுரம் 3) மாதோட்டம்
4) பதவியா 5) பொலன்னறுவை

28. சரசோதி மாலை எழுந்த காலம்.
1) அநுராதபுரக் காலம் 2) பொலன்னறுவைக் காலம்
3) ஆரியச்சக்கரவர்த்திகள் காலம் 4) சோழர் காலம்
5) நாயக்கர் காலம்

29. பூசலார் நாயனார் வரலாற்றுடன் தொடர்புடைய மன்னன்.
1) மாமல்லன் 2) பரமேஸ்வரவர்மன் 3) இராஜேந்திரன்
4) குலோத்துங்கன் 5) இராஜசிம்மன்

30. "இந்து சாதனம்" எனும் பத்திரிகையை வெளியிடும் நிறுவனம்.
1) விவேகானந்தசபை 2) சைவபரிபாலன சபை
3) இராம கிருஷ்ண மிஷன் 4) சைவ வித்தியா விருத்திசங்கம்
5) அகில இலங்கை இந்து மாமன்றம்

31. இந்து நாகரிகத்துறையின் கற்கை நெறியில் இந்து நாகரிகத்தையும் ஒரு பாடமாக கற்பிப்பதற்குரிய பாடத்தினை வகுத்தவர்.
1) பேராசிரியர் கோபால கிருஷ்ண ஐயர் 2) பேராசிரியர் வி . சிவச்சாமி
3) பேராசிரியர் சி . பத்மநாதன் 4) பேராசிரியர் கைலாசநாதக்குருக்கள்
5) பேராசிரியர் மா . வேதநாதன்

32. ஆரிய சமாசம் ஆரம்பிக்கப்பபட்ட ஆண்டு.
1) 1875 2) 1828 3) 1772 4) 1815 5) 1823

33. சங்கரர் குறிப்பிடும் அநிர்வசனீயம் எனப்படுவது.
1) பிரமம் 2) ஆன்மா 3) மாயை 4) முத்தி 5) உலகம்

34. முற்றிலும் கருங்கல்லினால் சிற்ப வேலைப்பாடுகளைக் கொண்டு அமைக்கப்பட்ட ஆலயம்.
1) முன்னேச்சரம் 2) பொன்னம்பலவாணேச்சரம்
3) திருக்கோணேச்சரம் 4) நல்லூர்
5) திருக்கேதீச்சரம்

35. "பெரிய கற்றளி" என அழைக்கப்படும் ஆலயம்.
1) சிதம்பரம் 2) திரிபுவனம் 3) ஐராவதேஸ்வரம்
4) காஞ்சிகைலாசநாதர் கோயில் 5) மாமல்லபுரக்கோயில்

36. மேல்வருவனவற்றுள் பௌத்த தூபியை முன்மாதிரியாகக் கொண்டு மிக அகலமான தளத்தின் மேல் அமைக்கப்பட்ட சிகரக் கோயில்.
1) விதர்கோன் மட்டளி 2) பட்டாரி மகாதேவன் 3) முகுந்தன் கோயில்
4) நச்சனா குடாசிவன் கோயில் 5) தியோ கதசாவதாரக் கோயில்

37. "எள்ளில் எண்ணெய் உள்ளடங்கி இருப்பது போலவும் , தயிரில் நெய் போலவும் விறகில் தீ போலவும் பிரமத்துவம் மறைந்துள்ளது" எனக் கூறும் உபநிடதம்.
1) கேன உபநிடதம் 2) பிரசன்ன உபநிடதம் 3) கட உபநிதடம்
4) சுவேதாஸ்வர உபநிடதம் 5) பிரகதாரணிய உபநிடதம்

38. உலகில் வாழ்ந்து கொண்டிருக்கும் போதே அடையப்பெறும் முத்தி.

1) பரமுத்தி 2) பதமுத்தி 3) ஜிவன்முத்தி 4) சாலோகமுத்தி 5) விதேகமுத்தி

39. ஈஸ்வரனுக்கும் பிரபஞ்சத்திற்கும் இடையே உள்ள பேதத்தைக் குறிக்க மத்துவர் கையாளும் பெயர்

1) சிவ ஈஸ்வரபேதம் 2) சிவ பஸ்பரபேதம் 3) சட பஸ்பர பேதம்
4) சீவ சடபேதம் 5) சட ஈஸ்வரபேதம்

40. அனந்த சயன வடிவம் எதனைக் குறித்து நிற்கிறது

1) ஜப்பனது அருள் பாலிக்கும் நிலை
2) இறைவனது முக்காலத்தையும் உணர்ந்தவனாய் துயிலும் நிலை
3) சிவனும், சக்தியும் இணைந்த நிலை
4) ஆழ்வார்களது வழிபாட்டு நிலை
5) சிவனது ஆடல் நிலை

➢ **41 தொடக்கம் 45 வரையுள்ள வினாக்களில் தரப்பட்டுள்ள கூற்றுக்களை வாசித்து அவற்றுக்குப் பொருத்தமானவற்றை பின்வரும் அட்டவணையின் I, II, III, IV ஆகிய நிரல்களிலிருந்து தெரிவு செய்க.**

| I | II | III | IV |
|---|---|---|---|
| A<br>நந்திக்கொடி | F<br>சர்க்கம் | K<br>ஞானம் | P<br>வம்சம் |
| B<br>பலம் | G<br>திருநீற்றுச்சோழன் | L<br>முக்தி | Q<br>புராணவிருத்தி |
| C<br>மானசாரம் | H<br>வீரியம் | M<br>சாதனம் | R<br>பலம் |
| D<br>விருத்தி | I<br>நடராஜர் | N<br>வேதவிருத்தி | S<br>ஜஸ்வர்யம் |
| E<br>சமன்லயம் | J<br>அவிரோதம் | O<br>சலவிக்கிரகம் | T<br>சிலாபரீட்சணம் |

41. விசிட்டாத்வைதம் குறிப்பிடும் ஈஸ்வரனின் பண்புகள்.

1) E,G,M,Q 2) B,H,K,S 3) B,J,O,T 4) C,F,O,R 5) A,F,L,P

42. இந்து விக்கிரகக் கலையுடன் தொடர்புடைய தொகுதி.

1) A,F,N,T 2) E,G,O,P 3) B,I,L,P 4) C,I,O,T 5) C,I,N,T

43. புராணங்கள் குறிப்பிடும் தச லட்சணங்கள் அடங்கும் தொகுதி.

1) B,I,M,T 2) E,H,O,T 3) C,I,N,T 4) D,F,L,P 5) A,G,M,S

44. சோழர்கால அரசியலுடன் தொடர்புடைய தொகுதி.

1) A,J,K,T 2) C,I,L,R 3) E,H,O,T 4) B,H,O,P 5) A,G,N,Q

45. பிரம சுத்திர நூலோடு தொடர்புடைய தொகுதி.

1) E,J,M,R 2) B,J,K,T 3) C,G,O,R 4) A,H,N,S 5) E,F,K,P

➢ ***46 தொடக்கம் 50 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் உரிய தலைப்புடன் பொருந்தாததைத் தெரிவு செய்க.***

46. மகாபுராணங்கள்.
   1) தெய்வங்களின் வரலாறுகளைக் கூறுவது.
   2) இறை நம்பிக்கையை வலுப்படுத்துவன
   3) கோயில் வழிபாடு, உருவவழிபாடு பற்றிக் கூறுவது.
   4) இந்து இலக்கிய மரபிற்கு அடிப்படையானது.
   5) குப்தர் காலத்திற்கு முன்தோற்றம் பெற்றது

47. இலங்கையின் இந்துசமய வளர்ச்சியில்
   1) ஈழத்தினை திருமூலர் சிவபூமி என அழைத்தமை
   2) சம்பந்தரும் சுந்தரரும் ஈழத்து திருத்தலங்கள் மீது பாடல் பாடியமை
   3) கதிர்காம முருகன் ஆலயத்தை துட்டகைமுனு வழிபட்டமை
   4) திருகோணமலையில் கோயில் அமைத்து அதற்கு "இராஜராஜேஸ்வரம்" என பெயரிட்டமை
   5) மகாவம்சம் நாக வழிபாட்டோடு சிவலிங்க வழிபாட்டையும் கூறுகின்றது.

48. மெய்யியல் வளர்ச்சியில் பகவத்கீதை
   1) பிரஸ்தானதிரயங்களில் ஒன்று
   2) வேதாந்திகள் பகவத்கீதைக்கு "கீதாபாஷ்யம்" என்ற உரை வகுத்துள்ளார்
   3) ஆன்மா அழியும் பொருள் என்பதை உணர்த்துகின்றது
   4) விஷ்ணுவின் வியாபக நிலையை விளக்குகின்றது
   5) அவதாரக்கோட்பாட்டின் வளர்ச்சிக்கு காரணமானது

49. கொக்கட்டிச் சோலை தான் தோன்றீஸ்வரம்
   1) மட்டக்களப்பு மாவட்டத்தில் தென்மேற்குப் பகுதியில் கொக்கட்டிச் சோலை எனும் இடத்தில் இவ்வாலயம் அமைந்துள்ளது
   2) கல் நந்தி புல் உண்ட சிறப்பிற்குரிய ஆலயம்
   3) கிழக்கு இலங்கையில் தேரோடும் கோயில் என்று சிறப்பிற்குரியது
   4) இக் கோயிலின் தல விருட்சம் கொக்கட்டிமரம்
   5) இக் கோயிலில் பூசை செய்பவர் கப்புறாளை எனப்படுவர்

50. உபநிடதங்கள்
   1) கிரியைகள் மூலமாக வாழ்வில் முழுமை பெற்ற நிலையில் ஏற்பட்ட ஆன்மீகத் தேடல்
   2) குருவுக்கு மிக அண்மையிலிருந்து அவர் கூறுகின்ற உண்மைகளைச் சிரத்தையுடன் கற்றல்
   3) உபநிடதம் எழுந்த காலம் தத்துவ சிந்தனைக் காலம்
   4) கி.மு 6ம் நூற்றாண்டில் எழுந்தவை
   5) கிரியைகளுக்கு எதிர் நிலையாக எழுந்தவை

(50x2=100 புள்ளிகள்)

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## நான்காம் தவணைப் பரீட்சை - 2022
# Conducted by Field Work Centre, Thondaimanaru
# 4th Term Examination - 2022

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| இந்து நாகரிகம் II<br>Hindu Culture II | Three Hours 10 min<br>Gr -13 (2022) | 46 | T | II |

## பகுதி – II

❖ பகுதி I இலிருந்து இரண்டு வினாக்களையும் பகுதி II இலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி – I

01. இந்துப்பண்பாட்டு மரபில் சிவாகமங்கள் பெறும் முக்கியத்துவத்தினை மேல்வரும் தலைப்புக்களில் ஆராய்க.

அ) கோயிற்கிரியைகள்

ஆ) நுண்கலைகள்

இ) ஆலய நிர்மாணமும் திருவுருவ அமைப்பும்

ஈ) தத்துவ சிந்தனைகள்

(5+5+5+5=20புள்ளிகள்)

02. ''தென்னக வரலாற்றில் பல்லவர் காலம் பக்தி நெறிக் காலமாகும்'' இக்கூற்றினை அடிப்படையாகக் கொண்டு மேல்வரும் விடயங்களை விளக்குக.

அ) அரசியல் சமூக சூழ்நிலை

ஆ) அரசர்களின் பங்கும் பணியும்

இ) நாயன்மார்களின் பங்களிப்பு

ஈ) திருக்கோயிலின் வளர்ச்சி

(5+5+5+5=20புள்ளிகள்)

03. இந்து தத்துவ சிந்தனைகளை வெளிப்படுத்துகின்ற வகையில் மேல்வரும் பகுதிகள் கொண்டுள்ள சிறப்புக்களை விளக்குக.

அ) வேதம்

ஆ) பகவத்கீதை

இ) பிரமசூத்திரம்

ஈ) உபநிடதம்

(5+5+5+5=20 புள்ளிகள்)

## பகுதி II

04. பத்தொன்பதாம் நூற்றாண்டிலே சமய சீர்திருத்த இயக்கங்கள் இந்துக்களிடையே ஏற்படுத்திய சமூக மேம்பாடுகளை பரிசீலனை செய்க.

(20 புள்ளிகள்)

05. சோழர்பெரு மன்னர் காலத்தில் மேன்மையடைந்த விடயங்களை மேல்வரும் தலைப்புக்களில் ஆராய்க.

அ) அரசர்களது பங்களிப்பு

ஆ) கோயில்களும் நுண்கலைகளும் (10+10=20 புள்ளிகள்)

06. விக்கிரகக்கலையில் அனந்தசயனவடிவத்தையும் அதனது பிரதிமாலட்சணத்தையும் தெளிவுபடுத்துக.

(20 புள்ளிகள்)

07. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சைவசமய வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகளை மேல்வரும் தலைப்புக்களில் விளக்குக.

அ) சமயப் பணிகள்

ஆ) சமூகப்பணிகள்

(10+10=20 புள்ளிகள்)

08. சங்கருடைய வேதாந்தக் கோட்பாட்டின் பிரதான விடயங்களை விளக்கிக் கூறுக.

(20 புள்ளிகள்)